www.Padasalai.Net www.CBSEtips.in

## மகிழ்ந்து செய்வேன்

வகுப்பு : 5 மொத்த மதிப்பெண் : 60

நேரம்: 2:30 மணி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு. (10 x 1 = 10)

1) சூரியனிலிருந்து ஐந்தாவதாக உள்ள கோள் எது?

அ) புதன் ஆ) பூமி

இ) செவ்வாய் ஈ) வியாழன்

2) வெப்பமான கோள்கள் எவை?

அ) புதன், சனி

ஆ) புதன், வெள்ளி

இ) வெள்ளி, யுரேனஸ்

ஈ) பூமி, வியாழன்

3) புவி தன்னைத்தானே சுழல்வதால் ஏற்படும் மாற்றம் எது?

அ) இரவு, பகல்

ஆ) கோடைக்காலம்

இ) குளிர்காலம்

ஈ) மழைக்காலம்

4) கற்கால மனிதன் முதன்முதலாக வாழ்ந்த இடம் எது?

அ) அடுக்குமாடி வீடு ஆ) குடிசை வீடு

இ) குகை ஈ) ஓட்டு வீடு

5) புதிய கற்கால மனிதர்கள் எந்த இடத்தின் அருகில் நிலையாக வாழத் தொடங்கினர்?

அ) குகை ஆ) ஆற்றங்கரை

இ) பாலைவனம் ஈ) காடு



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 37 5/21/2023 5:45:53 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**6) மாமிசம் மற்றும் உணவைச் சமைக்காமல் உண்டதன் காரணம் என்ன?**

அ) பாத்திரங்கள் இல்லை

ஆ) நெருப்பு பற்றி தெரியாது

இ) அடுப்பு இல்லை

ஈ) சமையலில் ஆர்வம் இல்லை

**7) தனிப்பட்ட நெறிமுறை அல்லாதது எது?**

அ) கருணை ஆ) நேர்மை

இ) அன்பு ஈ) நாட்டுப் பற்று

**8) பின்வருவனவற்றுள் தேசிய விழா எது?**

அ) தீபாவளி ஆ) பொங்கல்

இ) சுதந்திர தினம் ஈ) கிறிஸ்துமஸ்

**9) விண்வெளியுடன் சேரும் அடுக்கு எது?**

அ) ட்ரொபோஸ்பியர் ஆ) ஸ்ட்ரேட்டோஸ்பியர்

இ) மீசோஸ்பியர் ஈ) எக்ஸோஸ்பியர்

**10) பலத்த மழையைத் தரும் மேகம் எது?**

அ) படைமேகம் ஆ) கார்மேகம்

இ) கீற்றுமேகம் ஈ) திரள்மேகம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (5 x 1 = 5)

11) வானொலி அலைகளை எதிரொலிக்கும் அடுக்கு ________________

12) பாறைக்கோளம், நீர்க்கோளம், ________________ ஆகிய மூன்றும் சேர்ந்தது தான் உயிர்க்கோளம் ஆகும்.

13) சமூக நெறிமுறைகளுள் ஒன்று ____________________________ ஆகும்.

14) கற்கால மனிதன் ________________ கல்லைப் பயன்படுத்தி ஆயுதங்கள் செய்தான்.

15) சூரியக் குடும்பத்தில் உயிர்கள் வாழும் ஒரே கோள் ________________ ஆகும்.



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 38 5/21/2023 5:45:53 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**III. சரியா? தவறா? என எழுதுக.** (5 x 1 = 5)

16) சனிக்கோள் வளையங்களைக் கொண்டது. ______________

17) அட்லாண்டிக் பெருங்கடல் ஆஸ்திரேலியாவிற்கு அருகில் உள்ளது. ______________

18) புதிய கற்காலத்தில் மக்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினர். ______________.

19) போக்குவரத்து நெரிசலைச் சரிசெய்ய உதவுபவர் போக்குவரத்துக் காவலர் ஆவார். ______________

20) திரள் மேகம் வெண்பஞ்சு போல காட்சியளிக்கும். ______________

**IV. பொருத்துக.** (5 x 1 = 5)

| | | |
|---|---|---|
| 21) நீர்த் திவலைகளின் தொகுப்பு | – | ஆசியா |
| 22) வளிமண்டல வெளி அடுக்கு | – | வேளாண்மை |
| 23) நேர்மை | – | எக்ஸோஸ்பியர் |
| 24) ஆற்றங்கரை | – | தனிப்பட்ட நெறிமுறை |
| 25) மிகப்பெரிய கண்டம் | – | மேகம் |

**V. வேறுபட்ட ஒன்றினை வட்டமிடுக.** (5 x 1 = 5)

26) புதன், வெள்ளி, பூமி, சூரியன்

27) சூரிய ஒளி, மழை, தானியங்கள், செயற்கை உரம்

28) செடிக்கு நீருற்றுதல், நாட்டுப்பற்று, மதங்களை மதித்தல், கண்ட இடங்களில் குப்பை போடுதல்

29) பசிபிக், ஆர்டிக், அட்லாண்டிக், ஆசியா

30) கீற்று மேகம், திரள் மேகம், இடிமேகம், கார்மேகம்



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 39 5/21/2023 5:45:53 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

V. வினாக்களுக்கு விடையளி (5 x 2 = 10)

31) மேகங்களின் வகைகளை எழுதுக.

32) பண்பாட்டு நெறிமுறைகளை எழுதுக.

33) வாயுக்கோள்களின் பெயர்களை எழுதுக.

34) சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களை எழுதுக.



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 40 5/21/2023 5:45:53 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

35) பெருங்கடல்களின் பெயர்களை எழுதுக

**வினாக்களுக்கு விடையளி** (4 x 5 = 20)

36) கவின் சுகாதாரத்தைப் பேணிக்காப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். அவர் அதிகாலையிலேயே விழித்தெழுவார். பின் பற்களை நன்றாக துலக்குவார். தினமும் காலையில் குளிப்பார். சுத்தமான ஆடையை மட்டுமே அணிந்து கொள்வார். எங்கேனும் குப்பைகள் தென்பட்டால் அவற்றை எடுத்து குப்பைத்தொட்டியில் போடுவார். வெளியே செல்லும்போது காலணிகளை அணிந்து செல்வார். வாரந்தோறும் நகங்களை வெட்டுவார். உண்பதற்கு முன்னும் பின்னும் கைகளைக் சுத்தமாக கழுவுவார்.

கவின் வாழ்க்கை முறைகளில் இருந்து நீங்கள் கற்றுக் கொண்டவற்றை எழுதுக



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 41 5/21/2023 5:45:54 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

37) பருவ காலங்கள் ஏன் ஏற்படுகின்றன? அவற்றின் வகைகளைப் பட்டியலிடுக.

38) மண்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் ஏற்பட்ட மாற்றங்களை எழுதுக.



EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 42 5/21/2023 5:45:54 PM
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in

39) உலக வரைபடத்தில் கண்டங்களின் பெயர்களை எழுதிடுக.





EE_Social Science 5th_Tamil Medium_Term 1.indd 43
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
5/21/2023 5:45:54 PM